முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 613**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**03.06.2021**, வியாழக்கிழமை

1. ஓம் என்ற சக்தியே ஞானதேசிகா
ஓங்காரக்குடில் படைத்த ஆறுமுக அரங்கா
ஆம் என்று உன்னோடு உலகமக்கள்
ஆறுமுகன் என்னை வணங்கி இணைந்துவர
2. வருகின்ற மக்களுக்கு அழியாமை
வையகத்தில் உறுதிஉறுதி என்றுகூறி
பெருமைபட அரங்கன்உமக்கு ஞானஅறிவுரைஆசி
புகலுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
3. இனிதே இந்தபேருலகம் உன்சக்தியால்
இணையில்லாத ஞானயுகமாற்றம் அடையக்கூடும்
கனிவேலன்யான் பெருந்துணையாய் இருந்துவர
கருணைபட நீசெய்யும் அனைத்துசெயல்களுக்கும் என்ஆசிஉண்டு
4. உண்டப்பா என்வழி நீபெற்ற தவமும்வரமும்
உலகோர்க்கு சித்தியாக மாற்றப்பட்டு
உண்டதொரு கலியுகம் சடுதி
குருராஜன் உன்அருளால் ஆசியால் ஞானயுகமாகக்கூடும்
5. கூடவே அரங்கனே முருகனே என
குவலயத்தில் எங்கெல்லாம் ஜெபதபங்கள் பெருகுகின்றதோ
நாடங்கு எல்லாம் இனிதே சடுதி
ஞானஆட்சிக் காலமாக உதயமாகும்
6. ஆகவே அரங்கனைநோக்கி உலகோர் வரவர
அற்புதத்தை ஆறுமுகன்யான் நடத்தி மகிழ்விப்பேன்
யுகமே சுத்தசன்மார்க்க நெறிசக்தியோடு
உயர்ஞானமாம் அரங்கன் ஞானம் துணைபட
7. துணைபட சடுதி மாற்றம் பெறும்
துரிதகதி அற்புதங்கள் நிகழக்கூடும்
இடராக இருந்துவரும் சகலசிக்கலும்
இனிவருங்காலம் படிப்படியாய் அகன்றோடி அரங்கன்அருளால்
8. அருளால் அற்புதம் காணும்
அருளால் பாதுகாப்பாக மாறும்
இருள் விலகும் சரவணச்சுடரின் சக்தியால்
இந்தஉலகமே ஞானஒளிப் பெறக்கூடும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே —சுபம்—

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.